தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்

C.C. No.12 / 2025

PW : 13

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. அருண் | த / பெ. | | திரு. |
| கிராமம் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | தொழில் | : | |
| மதம் | : | | வயது | : | |

2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தின் 15 ம் தேதி ........................ பிரிவு 4 ஆணையுறுதி சட்டம் 1969 ன் படி திரு. V. சுந்தரராஜ்,M.L., அவர்கள் முன்பாக ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.

15.04.2025

முதல் விசாரணை

நான் தற்போது அரியலூர் ஒன்றியம் குடிசல் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் இடைநிலை ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன். வலங்கைமான் ஒன்றியம் பூண்டி மாளிகைதிடல் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் இடைநிலை ஆசிரியராக 2005 ஆம் ஆண்டியிலிருந்து 2013 வரை பணிபுரிந்தேன். ஆஜர் எதிரியை தெரியும். நான் வலங்கைமான் கூட்டுறவு கடன் சங்கத்தில் 2 லட்சம் 2012 ஆம் வருடம் கடனாக பெற்றேன். 2013 ல் எனக்கு தூத்துக்குடி மாவட்டத்திற்கு பணிஇடமாறுதல் வந்தபோது சங்கத்தில் கடன்இல்லா சான்று தேவைப்பட்டது. அதற்காக எனது

கடன்தொகையில் மீதமிருந்த கடன் பாக்கி தொகையை ஆஜர் எதிரியிடம் நேரடியாக செலுத்தினேன். அவர் அதை பெற்றுக்கொண்டு கடன்நிலுவையில்லா சான்று கொடுத்தார். நான் அதை பெற்றுக்கொண்டு பணிமாறுதலில் சென்றேன். அதன்பிறகு மீண்டும் நான் அரியலூருக்கு 2015 ல் பணிமாறுதல் பெற்று வந்தேன். கொஞ்சநாள் கழித்து வலங்கைமான் கூட்டுறவு சங்கத்திலிருந்து கடன் செலுத்தும்படி எனக்கு நோட்டீஸ் வந்தது. நான் சொசைட்டிக்கு சென்று கேட்டேன். அங்கு என்னை விசாரணை செய்து வாக்குமூலம் வாங்கிக்கொண்டார்கள். என்னிடம் காட்டப்படும் 81 விசாரணை அதிகாரியிடம் கொடுத்த வாக்குமூலம் நான் கொடுத்ததுதான் அதில் உள்ளது என்னுடைய கையெழுத்துதான் அந்த விசாரணை வாக்குமூலம் அசாஆ 36 ஆகும். என்னிடம் காட்டப்படும் கடன் பட்டுவாடா பேரேடு எண் 23 ல் பக்கம் 17 ல் உள்ள அருண் ரூ.2 லட்சம் கடன் அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான் அது அசாஆ 37 ஆகும். திருவாரூர் வணிக குற்றப்புலனாய்வு துறை போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

குறுக்குவிசாரணை

நான் முதல்விசாரணையில் சொல்லியுள்ள தூத்துக்குடி மாவட்டத்திற்கும் பிறகு அரியலூர் மாவட்டத்திற்கும் பணிமாறுதலான விவரத்தை போலிசார் விசாரணையில் சொல்லியிருக்கிறேன். நான் அவ்வாறு

சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. கூட்டுறவு சங்கத்திலிருந்து எனக்கு கடன்தொகை செலுத்தும்படி அறிவிப்பு வந்த விவரத்தை 81 விசாரணை அதிகாரியிடமும்போலிசாரிடமும் சொல்லியுள்ளேன். நான் அவ்வாறு சொல்லவில்லை என்றால் சரியல்ல. எனக்கு நோட்டீஸ் வந்ததாக பொய்யாக போலிசார் சொல்லிக்கொடுத்ததன்படி சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன இடத்தில் சொன்ன நேரத்தில் எதிரியிடம் எந்த பணமும் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. 81 விசாரணை அதிகாரி என்னிடம் சத்தியபிரமாணம் செய்து உறுதிமொழி பத்திரமாக என்னிடம் வாக்குமூலம் பெறவில்லை. சாதாரணமாக வாக்குமூலம் பதிவுசெய்தார்கள்.

V SUNDARARAJ

Digitally signed by V SUNDARARAJ
Date: 2025.04.15 19:20:30 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,

திருவாரூர்.

தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்

C.C. No.12 / 2025

PW : 12

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. அருண்மாறன் | த / பெ. | | திரு. |
| கிராமம் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | தொழில் | : | |
| மதம் | : | | வயது | : | |

2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தின் 15 ம் தேதி ........................ பிரிவு 4 ஆணையுறுதி சட்டம் 1969 ன் படி திரு. V. சுந்தரராஜ்,M.L., அவர்கள் முன்பாக ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.

15.04.2025

முதல் விசாரணை

நான் வலங்கைமான் வட்டம் மணக்குண்டு ஊராட்சிக்கு உட்பட்ட நிர்மலா அரசு உதவிபெறும் தொடக்கப்பள்ளியில் இடைநிலை ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். வலங்கைமானில் உள்ள பஞ்சாயத்து யூனியன் அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள் கூட்டுறவு சிக்கன மற்றும் கடன்சங்கத்தில் நான் உறுப்பினராக உள்ளேன். என்னுடைய உறுப்பினர் எண் 747 ஆகும். மேற்படி சங்கத்தில் 26.07.2014 ல் ரூ1,30,000/-ம்

கடனாக பெற்றேன். மாதாமாதம் எனது சம்பளத்தில் ரூ.3 ஆயிரம் அந்த கடனுக்காக பிடித்தம் செய்யப்பட்டது. 2014 ஆகஸ்ட் மாதத்திலிருந்து 2017



ஜூலை மாதம் வரை மாதாமாதம் ரூ 3 ஆயிரம் பிடித்தம் செய்யப்பட்டது. 3 ஆண்டுகள் கட்டியபிறகு நான் கட்டவேண்டிய தொகை குறித்து ஆஜர் எதிரியிடம் நேரடியாக கேட்டபோது 47,253 ரூபாய் கட்டவேண்டும் என கூறினார். 05.08.2017 அன்று நான் மேற்படி 47,253 ரூபாயை ஆஜர் எதிரியிடம் நேரடியாக மொத்தமாக கொடுத்தேன். அவரிடமிருந்து கடன்இல்லா சான்று கேட்டேன். ஆஜர் எதிரி கடன்இல்லா சான்று கொடுத்தார். அதற்கு அடுத்த மாதத்திலிருந்து என்னுடைய சம்பளத்திலிருந்து ரூ 3 ஆயிரம் பிடித்தம் செய்யப்படவில்லை. என்னிடம் காட்டப்படும் கடன்இல்லா சான்று ஆஜர் எதிரி எனக்கு கொடுத்ததுதான். அது அசாஆ 32 ஆகும். (ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது) என்னுடைய கடன் எண் 1775 ஆகும். சங்கத்திலிருந்து கடன் குறித்து விசாரணை செய்யப்பட்டபோது நான் கடன்தொகையை செலுத்திவிட்டேன் என்றும் அதற்காக கடன்நிலுவையில்லா சான்று எனக்கு கொடுக்கப்பட்டது என்ற விவரத்தை சொன்னேன். விசாரணை அதிகாரி நான் செலுத்திய தொகை கடனுக்காக வரவு வைக்கப்படவில்லை என்று சொன்னார். என்னிடம் காட்டப்படும் வாக்குமூலம் 81 விசாரணை அதிகாரியிடம் நான் கொடுத்ததுதான் அதில்

உள்ள கையொப்பம் என்னுடையதுதான் அந்த வாக்குமூலம் அசாஆ 33 ஆகும். சங்க விசாரணையின்போது என்னுடைய கடன் நிலுவையில்தான் உள்ளது



நான் கொடுத்த பணம் வரவுவைக்கப்படவில்லை என்று சொன்னார்கள். எனக்கு இதனால் மனஉளைச்சல் ஏற்பட்டதால் மறுபடியும் ரூ.71 ஆயிரம் சொச்சம் பணத்தை 5 முறையாக கூட்டுறவு வங்கியில் செலுத்தி ரசீது பெற்றுக்கொண்டேன். அந்த ரசீதுகள் 5 எண்ணிக்கை நகல் அசாஆ 34 வரிசையாகும். (அசல் ரசீதுகளுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது) (எதிரி தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது) என்னிடம் காட்டப்படும் கடன்பேரேடு எண் 22 ல் பக்கம் எண் 27 ல் உள்ள அருண்மாறன் கடன்தொகை ரூ.1,30,000/- என்று எழுதப்பட்டிருப்பதில் உள்ளது என்னுடைய கையொப்பம் தான் அது அசாஆ 35 ஆகும். 81 விசாரணை அதிகாரியும் வணிக குற்றபுலனாய்வுத்துறை போலிசாரும் என்னை விசாரித்தார்கள்.

குறுக்குவிசாரணை

81 விசாரணை அதிகாரி என்னை விசாரித்து வாக்குமூலம்வாங்கிக்கொண்டார்கள். சத்தியபிரமாணம் செய்வித்து என்னிடம் வாக்குமூலம் வாங்கினார்களா என்று எனக்கு நினைவில்லை. நான் முதல்விசாரணையில் சொல்லியுள்ள விவரங்களைதான் போலிசார் விசாரணையிலும் 81 விசாரணை அதிகாரியிடமும் சொல்லியுள்ளேன். நான்

சொன்ன விதத்தில் சொன்ன நேரத்தில் எந்த ஒரு தொகையும் எதிரியிடம் நேரடியாக கொடுக்கவில்லை என்றும் வழக்கிற்காக கொடுத்தேன் என்று



சொல்வதுபொய் என்றும் சொன்னால் சரியல்ல. 05.08.2017 க்கு பிறகு என்னுடைய சம்பளத்தில் இருந்து எந்த ஒரு தொகையும் பிடித்தம் செய்யப்படவில்லை என்பதற்கான ஆதாரங்களை 81 விசாரணை அதிகாரியிடம் தெரிவித்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். அசாஆ 34 வரிசையானது கார்பன் நகல் என்று சொன்னால் சரிதான். 07.10.2022, 08.02.2023, 14.02.2023, தேதியிட்ட பில்களாகும். 14.02.2023 ம் தேதி 3 பில்கள் ஒரே தேதியில் கொடுக்கப்பட்டுள்ளது என்ற விவரத்தை கேட்டு தெரிந்துகொள்ளவில்லை. எல்லாபில்களிலும் அட்ஜெஸ்ட்மெண்ட் என்ற முத்திரை குத்தப்பட்டுள்ளது. பணம் செலுத்தியதாக முத்திரை குத்தப்படவில்லை. நேரடியாக பணம் செலுத்தினால்தான் கேஸ்பெய்ட், அட்ஜெஸ்ட்மெண்ட் என்றால் வேறொருவர் கணக்கிலிருந்து உளவடைப்பு செய்யப்பட்ட தொகை என்றால் சரியல்ல. நான் நேரடியாக தொகை எதுவும் செலுத்தவில்லை என்றும் வேறொருவர் கணக்கிலிருந்து உளவடைப்பு செய்யப்பட்டது என்றும் சொன்னால் நான் நேரடியாகதான் பணம் செலுத்தினேன். மேற்படி ரசீதுகளில் நான் செலுத்தியதொகை எதிரியை இடைநீக்கம் செய்யப்பட்ட காலத்தில்

எதிரிக்கு வழங்கிய பிழைப்பூதிய த்திலிருந்து உளவடைப்பு செய்யப்பட்டதொகை என்று சொன்னால் சரியல்ல. நான் நேரடியாக மேற்படி

.5.

ரசீதுகள் மூலம் பணம் செலுத்தியதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

V SUNDARARAJ

Digitally signed by V SUNDARARAJ
Date: 2025.04.15 19:20:40 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,

திருவாரூர்.

<u>தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்</u>

<u>C.C. No. 12 / 2025</u>

PW : 11

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி. ஜாய்ஸ்ராணி | த / பெ. | | திரு. |
| கிராமம் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | தொழில் | : | |
| மதம் | : | | வயது | : | |

2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தின் 15 ம் தேதி ........................ பிரிவு 4 ஆணையுறுதி சட்டம் 1969 ன் படி திரு. V. சுந்தரராஜ்,M.L., அவர்கள் முன்பாக ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.

<u>15.04.2025</u>

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது வலங்கைமான் ஊராட்சிஒன்றியம் சின்னகரம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் இடைநிலை ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். பஞ்சாயத்து யூனியன் சிக்கன சேமிப்பு மற்றும் கடன் சங்கத்தில் உறுப்பினராக இருந்தேன். எனது உறுப்பினர் எண் 682 ஆகும். எனது குடும்ப சூழ்நிலை காரணமாக மேற்படி சங்கத்தில் 7 லட்சம் ரூபாய்

கடனாக பெற்றேன். என்னுடைய கடன் எண் 1803 ஆகும். மாததவணைமுறையில் அந்த கடனை திரும்ப செலுத்திக்கொண்டிருந்தேன். 2015 ஆம் வருடத்தில் எனக்கு உடல்நிலை சரியில்லாததால் நான் சென்னை



காமாட்சிமருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டிருந்தேன். அந்த சமயத்தில் நான் பெற்ற கடனுக்காக கூடுதலாக கடன்தொகையை செலுத்துவதாக எதிரி கவிதா விடம் கூறினேன். எனது சகோதரி ஆனந்தி என்பவர் மூலமாக பணத்தை செலுத்தும்படி சொல்லி கணக்கு எண்ணை கொடுத்தார். அதன்படி ரூ.65 ஆயிரத்தை 12.01.2017 அன்று என்னுடைய அக்கௌண்ட்லிருந்து ஆனந்தியின் அக்கௌண்ட்டிற்கு பண பரிமாற்றம் செய்தேன். 13.01.2017 அன்று என்னுடைய அக்கௌண்ட்டிலிருந்து கவிதாவின் அக்கௌண்ட்டிற்கு ரூ.24 ஆயிரத்தை செலுத்தினேன். 15.01.2017 அன்று ரூ12 ஆயிரத்தை எதிரி கவிதாவிடம் நேரில் கொடுத்தேன். 18.01.2017 அன்று ரூ10 ஆயிரத்தை எதிரி கவிதாவிடம் நேரில் கொடுத்தேன். எதிரி கவிதாவிற்கு அடுத்து பணிக்கு வந்தவர் விசாரணைக்கு வரும்போது எதிரி கவிதாவிடம் கொடுத்த பணம் பற்றி கூறுங்கள் இப்போது கூட்டுவட்டிபோட்டு பணம் செலுத்தும்படி சொன்னார். மேற்கூறிய பணத்தை தவிர ரூ.2,40,000/- ம் நான் மேற்படி சங்கத்திற்கு செலுத்தியுள்ளேன். மேற்படி சங்கத்திலிருந்து விசாரணைக்காக என்னை கூப்பிட்டார்கள். விசாரணையில் எதிரிகவிதா

என்னிடம் இருந்து வாங்கிய பணத்தை ஒப்புக்கொண்டார். என்னிடம் காட்டப்படும் கடன்பேரேடு 22 ல் பக்கம் 42 ல் உள்ள கடன் எண் 1803 ல் ஜாய்ஸ்ராணி என்ற பெயரில் ரூ.70 ஆயிரம் பெற்றிருப்பதற்கான கையொப்பம்



என்னுடைய துதான். அது அசாஆ 30 ஆகும். என்னிடம் காட்டப்படும் 81 விசாரணை வாக்குமூலம் என்னால் கொடுக்கப்பட்டதுதான் அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான் அந்த வாக்குமூலம் அசாஆ 31 ஆகும். வணிக குற்றபுலனாய்வுத்துறை போலிசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்குவிசாரணை

போலிசார் என்னை எங்குவைத்து விசாரித்தார்கள் என்று தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. 2024 ஆம் ஆண்டு இந்த வழக்கு தொடர்பாக விசாரித்தார்கள். போலிசார் விசாரித்து என்னிடம் கையெழுத்து வாங்கிக்கொண்டார்கள். நான் முதல்விசாரணையில் சொல்லியுள்ள விவரங்களைதான் போலிசாரிடமும் சொன்னேன். 2015 ல் சென்னை காமாட்சி மருத்துவமனையில் சிகிச்சைபெற்றுக்கொண்டேன் என்ற விவரத்தை போலிசாரிடம் சொல்லியுள்ளேன். அவ்வாறு சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் சங்கத்தில் 2015 ஆம் ஆண்டு கடன் பெற்றேன். நான் 2017 ல் எதிரியிடம் பாக்கிதொகை குறித்து கேட்டபோது ஆனந்தியினுடைய வங்கி கணக்கு மூலம் கொடுத்தார் இதை போலிசாரிடம் சொல்லியுள்ளேன். நான்

அவ்வாறு போலிசாரிடம் சொல்லவில்லை என்றால் சரியல்ல. 15.01.2017 அன்று ரூ12 ஆயிரம் கொடுத்ததாக உள்ள விவரத்தை போலிசார் விசாரணையில்சொல்லியுள்ளேன். நான் அவ்வாறு சொல்லவில்லை என்றால்



சரியல்ல. ரூ.2,40,000/- ஐ மொத்தமாக செலுத்தியுள்ளேன் என்ற விவரத்தை 81 விசாரணை அதிகாரியின் முன்பாக போலிசாரிடம் சொல்லவில்லை என்றால் சரியல்ல. 81 விசாரணை அதிகாரியின் முன்பாக எதிரி தான் தொகையை செலுத்தவில்லை என்று சொன்னார் என்று போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். நான் அவ்வாறு சொல்லவில்லை என்றால் சரியல்ல. 81 விசாரணை அதிகாரி என்னிடம் சாதாரணமாக எழுதிக்கொண்டு கையொப்பம் பெற்றார். சத்தியபிரமாணம் செய்து விசாரிக்கவில்லை. ஆனந்தி என்பவர் சங்கத்தில் பணிபுரியும் ஊழியர் இல்லை என்று சொன்னால் சரிதான். எதிரியிடம் நேரடியாக பணம் கொடுத்தேன் என்பது பொய் என்றும் போலிசார் சொல்லிக்கொடுத்ததன்படி வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் ஆனந்திமூலமாக பணம் செலுத்தினேன் என்பது சங்கத்திற்குரிய பணம் இல்லை என்றால் சரியல்ல. நான் பெற்ற கடனை உரிய காலத்தில் முறையாக செலுத்தவில்லை என்றும் அதனால்தான் எதிரிமீது பொய்யாக குற்றம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் செலுத்தவேண்டிய தொகையை 4 தவணையாக என்னகாரணத்திற்காக தனிதனியாக

பிரித்துகொடுத்தேன் என்ற விவரத்தை போலிசாரிடம் சொல்லவில்லை என்றால் சரியல்ல. மாததவணை நேரடியாக பணம் செலுத்தும்போது சில நேரங்களில் தேதி தவறி முன்பின்னாக பல தேதிகளில் மாற்றி

.5.

செலுத்தியிருக்கிறேன் என்றால் எதிரி சொன்னதன்பேரில் சொன்ன தேதியில் நான் செலுத்தியுள்ளேன். எதிரியிடம் நேரடியாக பணம் செலுத்தினேன் என்றும் ஆனந்தி மூலமாக பணம் செலுத்தினேன் என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

தலைமை நீதித்துறை நடுவர்,
திருவாரூர்.